**நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு**

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.



# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2025

## இடைநிலை மத்திய பிரிவு (ஆண்டு 7 & 8)

## Mid Intermediate Level (Year 7 & 8)

வழங்கப்படும் நேரம் : 120 நிமிடங்கள்

Time Given : 120 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்துப் பதிலளிக்க வேண்டும்.
ஆசிரியர் வாசிப்பதில் உதவி செய்யலாகாது.

**Aug 2025**

**பின்வரும் 1 – 5 வரையிலான வினாக்களில் கோடிட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.**

(1 X 5 = 5 Marks)

1. தமிழ்நாடு <u>தென்னிந்தியா</u>வில் உள்ளது

(அ) தென்னி + இந்தியா (ஆ) தென் + இந்தியா

(இ) தெற்கு + இந்தியா (ஈ) தென்னி + ந்தியா

2. எங்கள் மாணவர்கள் மிகுந்த <u>மொழியாற்றல்</u> உடையவர்கள்

(அ) மொழி + யாற்றல் (ஆ) மொழி + ஆற்றல்

(இ) மொழி + ஆட்றல் (ஈ) மொழி + யாட்றல்

3. இராசராச சோழன் சோழப்பேரரசை உருவாக்கிப் <u>பேரரசனாக</u> ஆட்சி செய்தான்

(அ) பேர் + அரசன் (ஆ) பேரா + அரசன்

(இ) பேரிய + அரசன் (ஈ) பெரிய + அரசன்

4. இந்த <u>நூற்றாண்டு</u> விஞ்ஞான வளர்ச்சியின் யுகமாக பார்க்கப்படுகின்றது

(அ) நூற் + றாண்டு (ஆ) நூற் + ஆண்டு

(இ) நூட்று + ஆண்டு (ஈ) நூறு + ஆண்டு

5. சுதந்திர தினத்தன்று <u>கொடியேற்றினோம்</u>

(அ) கொடி + யேற்றினோம் (ஆ) கொடி + யேட்றினோம்

(இ) கொடி + ஏற்றினோம் (ஈ) கொடி + ஏட்றினோம்

**பின்வரும் 6 – 10 வரையிலான வினாக்களில் கோடிட்ட சொற்களுக்குரிய ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.**

(1 X 5 = 5 Marks)

6. நம் கலாசாரத்தைப் <u>பேணுதல்</u> ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

(அ) கைவிடுதல் (ஆ) பாதுகாத்தல்

(இ) மறந்துவிடுதல் (ஈ) அழித்தல்

7. <u>வணிகர்</u> என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல் எது?

(அ) விவசாயி (ஆ) ஆசிரியர்

(இ) வியாபாரி (ஈ) மருத்துவர்

8. இந்தக் களிமண் பானையின் <u>வடிவம்</u> மிகவும் அழகாக உள்ளது.

(அ) உருவம் (ஆ) வண்ணம்

(இ) மென்மை (ஈ) பெருமை

9. தினமும் தமிழ் <u>பயில்வது</u> அவளுக்கு நல்ல முன்னேற்றத்தைத் தருகிறது.

(அ) ஓய்வெடுத்தல் (ஆ) கடந்து செல்லுதல்

(இ) வேலை செய்வது (ஈ) கற்பது

10. இந்த விஞ்ஞானி புதிய மருந்துக்கான <u>ஆராய்ச்சி</u> செய்துள்ளார்.

(அ) சோதனை (ஆ) கண்டுபிடிப்பு

(இ) ஆய்வு (ஈ) கற்பித்தல்

**பின்வரும் 11 – 15 வரையிலான கேள்விகளுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(1 X 5 = 5 Marks)

11. பூர்வீகம் என்றால் என்ன?
    அ. நம் குடும்பத்துடன் தற்போது வாழும் இடம்.
    ஆ. நம் பரம்பரை பல காலம் வாழ்ந்த இடம்.
    இ. நம் பெற்றோர்கள் பணி ஓய்வுக்கு பின் தங்கும் இடம்.
    ஈ. நாம் வாழ ஆசைப்படும் இடம்.

12. ஊடகம் என்பது
    (அ) உணவு பரிமாற உதவுவது (ஆ) மனிதர்களை ஏற்றி செல்ல உதவுவது.
    (இ) தகவல்களைப் பரிமாற உதவுவது (ஈ) பொருட்களை ஏற்றி செல்ல உதவுவது.

13. வேலைவாய்ப்புக்காக வெளிநாட்டில் குடியேறுவதைக் குறிக்கும் சொல்
    (அ) பயணம் (ஆ) புலம்பெயர்தல் (இ) கூடிவாழ்தல் (ஈ) சுற்றுலா

14. “நோயற்ற வாழ்வே குறைவற்ற ________ ” என்பதைப் பொருத்தமாய் முடிக்க ஏற்ற சொல் எது?
    (அ) செல்வம் (ஆ) உடல்நலம் (இ) பணம் (ஈ) பதவி

15. “கொடிது கொடிது முதுமையில் ________ ” என்பது எந்த வார்த்தையால் பொருந்தும்?
    (அ) இளமை (ஆ) தனிமை (இ) பொறுமை (ஈ) இனிமை

**பின்வரும் 16 முதல் 20 வரையிலான வினாக்களில் வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.**

(1 X 5 = 5 Marks)

16. (அ) வரைதல் (ஆ) தீட்டுதல் (இ) வாசித்தல் (ஈ) எழுதுதல்
17. (அ) சடு குடு (ஆ) கோ கோ (இ) கிட்டிப்புள் (ஈ) சதுரங்கம்
18. (அ) பனை ஓலை (ஆ) மின்னஞ்சல் (இ) வானொலி (ஈ) தொலைக்காட்சி
19. (அ) அரிசி (ஆ) தோசை (இ) வெந்தயம் (ஈ) உளுந்து
20. (அ) தாமரை (ஆ) மல்லிகை (இ) அல்லி (ஈ) வில்வம்

**பின்வரும் 21 – 25 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(1 X 5 = 5 Marks)

21. பிறருடன் அளவாகப் பழக வேண்டும் என்ற கருத்து அமையக் கூடிய பழமொழி
    (அ) சேர இருந்தால் செடியும் பகை (ஆ) ஒற்றுமையே பலம்
    (இ) பதறிய காரியம் சிதறும் (ஈ) ஆபத்துக்கு பாவமில்லை

22. அறிவை உணர்த்தும் பழமொழி
    (அ) பணம் பத்தும் செய்யும் (ஆ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
    (இ) அறிவே ஆற்றல் (ஈ) பழகப் பழக பாலும் புளிக்கும்

23. விடா முயற்சி பலன் தரும் என்ற கருத்து அமையக் கூடிய பழமொழி
    (அ) நல்ல மாட்டுக்கு ஒரு சுவடு (ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்
    (இ) தன் கையே தனக்குதவி (ஈ) ஆழம் தெரியாமல் காலை விடாதே

24 ஐயம் இட்டு .....

(அ) உன் (ஆ) சாப்பிடு (இ) உண் (ஈ) குடி

25 கந்தையானாலும் கசக்கிக் ....

(அ) வை (ஆ) கட்டு (இ) கத்து (ஈ) போடு

**பின்வரும் 26 – 30 வரையிலான வினாக்களில் உள்ள வாக்கியங்களைச் சரியான ஒழுங்கில் இடம் பெறும் வகையில் வரிசைப்படுத்துக.** (2 X 5 = 10 Marks)

26. (அ) அவர்கள் மனதளவில் தளர்ந்துவிடுவார்கள்.

(ஆ) தினமும் ஓய்வின்றி வேலை செய்பவர்கள் மிக விரைவில் உடல் நலம் குன்றிவிடுவார்கள்.

(இ) பள்ளிக்கூடம் முடிந்து வீடு வந்த பின்னரும் தொடர்ந்து படிப்பதென்பது கடினமான செயல்.

(ஈ) மாணவர்களும் அப்படித்தான்.

(அ) ஆ, அ, ஈ, இ (ஆ) இ, ஆ, ஈ, அ (இ) ஈ, ஆ, இ, அ (ஈ) அ, ஈ, இ, ஆ

27. (அ) நாமும் நமது உறவினர்களும் மகிழ்ச்சியாக இருந்தால் மொத்தத்தில் நமது சமூகம் மகிழ்ச்சியாக இருக்கும்.

(ஆ) நாம் மகிழ்ந்தால் நமது குடும்பம் மகிழும்.

(இ) உடலும் மனமும் ஆரோக்கியமாக இருந்தால் நமது வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகும்.

(ஈ) நமது குடும்பம் மகிழ்ச்சியடைந்தால் நமது சுற்றம் மகிழ்ச்சியடையும்.

(அ) அ, ஈ, இ, ஆ (ஆ) ஆ, அ, இ, ஈ (இ) இ, ஆ, ஈ, அ, (ஈ) ஈ, ஆ, இ, அ

28. (அ) பறவைகளும் விலங்குகளும் இயல்பாகவே தமது உடலைத் திடகாத்திரமாக வைத்திருக்கின்றன

(ஆ) அதில் உடற்பயிற்சி முக்கியமானது

(இ) தம் உடல் வாகுக்கு ஏற்ப அவை பறந்தும் நடந்தும் ஓடியும் உடலைப் பேணுகின்றன

(ஈ) உடலை நலமாக வைத்திருக்க பல வழிகள் உள்ளன

(அ) ஈ, ஆ, அ, இ. (ஆ) அ, ஆ, இ, ஈ, (இ) ஆ, அ, ஈ, இ, (ஈ) இ, ஆ, ஈ, அ,

29. (அ) உரைத்து வாழ்ந்தோம் உழைத்து வாழ்வோம்

(ஆ) உண்பது நாழி உடுப்பது இரண்டே

(இ) பிறந்த பின்னர், யாதும் ஊரே, யாவரும் கேளிர்

(ஈ) உறைவிடம் என்பது ஒன்றேயென

(உ) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

(அ) அ, ஆ, இ, ஈ, உ (ஆ) உ, இ, ஆ, ஈ, அ இ) இ, ஆ, ஈ, உ, அ (ஈ) உ, ஈ, ஆ, இ, அ

30. (அ) இரவானால் பகல் ஒன்று வந்திடுமே

(ஆ) ஓவ்வொரு விடியலுமே .... சொல்கிறதே

(இ) ஓவ்வொரு பூக்களுமே சொல்கிறதே

(ஈ) வாழ்வென்றால் போராடும் போர்க்களமே

(அ) அ, ஆ, ஈ, இ (ஆ) ஈ, இ, அ, ஆ (இ) இ, ஈ, ஆ, அ (ஈ) ஆ, அ, இ, ஈ

**31 – 32 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொற்களைத் திருத்தி எழுதுக.** (1 X 2 = 2 Marks)

அடிக்கடி (31) இள்லாவிட்டாலும், இடைக்கிடையே நாங்கள் எமது பூர்வீகத்திற்குச் (32) சென்ரு வர வேண்டும்.

**பின்வரும் 33 – 36 வரையிலான வினாக்களுக்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து எழுத்து வழக்குச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.** (1 X 4 = 4 Marks)

33. பல (விடயங்களைத் / விசயங்களைத் ) தெரிந்து கொண்டேன்.

34 வழி நெடுக ஊர் செய்திகளைப் ( பத்தி / பற்றி ) எல்லோரும் பேசிக்கொண்டே வந்தனர்.

35. சாலையின் இருபுறங்களிலும் ( தென்னந் / தென்ன ) தோப்புகளும், வயல்களும் கண்களைக் கவர்ந்தது.

36. இவர்கள் இருவரும் ஆஸ்திரேலியாவில் ( சந்தித்துத் / சந்திச்சு ) திருமணம் செய்தனர்.

**37 – 39 வரையுள்ள வினாக்களுக்கு தமிழ் வாக்கியங்களை ஆங்கிலத்திற்கும், ஆங்கில வாக்கியத்தை தமிழுக்கும் மொழி பெயர்த்து எழுதுக** (3 X 3 = 9 Marks)

37. சிற்றுண்டி வாங்கி உண்பதற்கு அப்பா எனக்கு ஐந்து டொலர்கள் தந்தார்.
38 எனது மாமாவின் திருமண விழாவில் கலந்து கொண்டேன்.
39 We will be attending school camp this week.

**கொடுக்கப்பட்டுள்ள விளம்பரத்தை வாசித்து 40 – 44 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடை எழுதுக.** (3 X 5 = 15 Marks)



40. இந்த மருத்துவ முகாம் யாரின் நினைவாக நடத்தப்படுகிறது?

41. இந்த மருத்துவ முகாம் எந்த திகதியில், எந்த நேரத்தில் நடைபெற உள்ளது?

42. இந்த முகாமில் பங்கேற்கும் மருத்துவரின் பெயர் என்ன?

43. முகாமில் எந்தெந்த மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட உள்ளன?

44. இந்த மருத்துவ முகாமில் பயன்பெறச் செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு?

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 45 – 49 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

(3 X 5 = 15 Marks)

மதுரை மாநகரின் இதயமாகத் திகழும் மீனாட்சி அம்மன் கோவில், தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாடு, வரலாறு, சிற்பக் கலை மற்றும் ஆன்மீகத்தின் அடையாளச் சின்னமாகும். வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ள இக்கோவில், அன்னை மீனாட்சியையும், அவருடைய துணைவரான சுந்தரேசுவரரையும் போற்றி வணங்கும் திருத்தலமாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தொன்மையைக் கொண்ட இந்தக் கோவில், தமிழரின் கட்டடக்கலையின் தலைசிறந்த எடுத்துக்காட்டாகப் போற்றப்படுகிறது. கோவிலைச் சுற்றிலும் அமைந்துள்ள 14 வானுயர்ந்த கோபுரங்கள், ஆயிரக்கணக்கான அழகான சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுப் பார்ப்போரை மெய்மறக்கச் செய்கின்றன.

கோவிலுக்குள் அமைந்துள்ள ஆயிரங்கால் மண்டபம் (மொத்தம் 985 தூண்கள்) மற்றும் பொற்றாமரைக் குளம் போன்றவை, இக்கோவிலின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் முக்கிய அம்சங்களாகும். குறிப்பாக, இந்த மண்டபத்திலுள்ள சில தூண்களில் தட்டும்போது இசை ஒலிகள் கேட்கப்படுவது, பண்டைய தமிழர்களின் மேன்மையான கட்டடக் கலை அறிவுக்கு ஒரு வாழும் சான்றாக அமைந்துள்ளது.

ஆண்டுதோறும் நடைபெறும் சித்திரைத் திருவிழாவும், மீனாட்சி திருக்கல்யாண விழாவும் இலட்சக்கணக்கான பக்தர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கின்றன. இக்கோவில், தமிழ் கலாசாரத்தின் மையப் புள்ளியாகவும், இசை, நடனம் மற்றும் சிற்பக் கலைகளின் உறைவிடமாகவும் திகழ்கிறது.

கேள்விகள்:

45. மீனாட்சி அம்மன் கோவில் எங்கே அமைந்துள்ளது? இதன் வரலாற்று சிறப்பு எவ்வளவு தொன்மையானது?

46. இந்தக் கோவிலில் எத்தனை கோபுரங்கள் உள்ளன? அவை எதனால் சிறப்பு பெற்றவை?

47. ஆயிரங்கால் மண்டபத்தின் தனித்துவமான அம்சங்கள் யாவை?

48. மீனாட்சி அம்மன் கோவிலில் வழக்கமாக நடைபெறும் திருவிழாக்கள் யாவை?

49. இக்கோவில் தமிழ்க் கலாசாரத்தில் எத்தகைய பங்கு வகிக்கிறது?

**50 . கட்டுரை எழுதுதல் – பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து** 75 **சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.** (20 Marks)

அ) எனக்குப் பிடித்த ஊர்

ஆ) கல்வியின் சிறப்புகள்